தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993, பிப்ரவரி, 8, திங்கட்கிழமை.

தை 26, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு—2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்."

பிறர்க்கு துன்பம் தரும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் இப்போதும் சரி, பின்னர் எப்போதும் சரி, ஒருவருக்கு இன்பத்தையே தரும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண். 1, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு நிதியமைச்சர்.

1—

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படும் தணிக்கைக் கட்டணம்.

*13842—டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணம் வசூல் செய்வதை நிறுத்த அரசு ஆவன செய்யுமா ?

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்திய நிறுவனச் சட்டத்தின் கீழ் தணிக்கைச் கட்டணம் நிறுவனங்களிடமிருந்து வசூல் செய்யும் முறை நடைமுறையில் உள்ளது. அதேபோல், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் விதி 103-ன் கீழ் தணிக்கைக் கட்டணம், கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் நிதியிலிருந்து கட்ட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதற்காக, அரசு ஏற்கும் செலவினை ஈடுகட்டும் முறையில் இத்தணிக்கைக் கட்டணம் உள்ளது. மேலும், ஆதி திராவிடர் மற்றும் நலிந்த பிரிவினர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு தணிக்கைக் கட்டண விதிப்பிலிருந்து முழுவதும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆதலால், அரசு ஏற்கெனவே விலக்கு அளித்த சங்கங்கள் தவிர மற்ற சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யும் முறையில் எவ்வித மாற்றமும் தேவைப்படவில்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கணக்குத் துறையில் அரசின் கீழ் தல நிதி கணக்குத் துறை-லோக்கல் ஃபண்ட் ஆடிட், இந்து சமய அறநிலைய கணக்குத்துறை - எச். ஆர். அண்ட் சி.இ. ஆடிட் மற்றும் கூட்டுறவு கணக்குத்துறை - கோ-ஆப்பரேட்டிவ் ஆடிட் என்ற மூன்று துறைகள் உள்ளன. அதில் முதல் இரண்டு துறைகளுக்கு தணிக்கைக் கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதுபோல் கூட்டுறவுத் துறை என்பது மக்களால் உருவாக்கப்பட்டு மக்களின் நலனுக்காகச் செயல்படும் துறையாகும் எனவே கூட்டுறவுச் சங்கங்களிடத்தில் அரசு வசூலிக்கும் தணிக்கைக் கட்டணத்தை ரத்து செய்யவேண்டும் என்ற வகையில் மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் நலிந்தவர்கள், ஆதி திராவிடர்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கங்கள் அதாவது மிகவும் அத்தியாவசியமாக, நட்டத்திற்கு உள்ளாகிற அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு தணிக்கைக் கட்டணத்திலிருந்து விலக்கு தரப்பட்டு இருக்கிறது. ஆனால் பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்களினுடைய நோக்கமே அது வியாபாரத் தன்மையில் இயங்க வேண்டும் என்பதும், இலாபத்தை ஈட்டவேண்டும் என்பதும் தான். ஆகவே அவைகளுக்குத் தணிக்கைக் கட்டணம் விதிப்பதிலே எவ்வித தவறும் இல்லை ஆகவே அதை நீக்குவது தேவையும் இல்லை பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதி திராவிடர்கள் அல்லது மீனவர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்

களாக இருந்தால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்கப்பட்டு இருக்கிறது. நட்டத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்கப்பட்டு இருக்கிறது. கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் இல்லை. கூட்டுறவுப் மேற்பார்வை ஒன்றியங்கள், எல்லா பனைப்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், எல்லா மீனவர் கூட்டுறவு இணையங்கள், எல்லா கைக்குத்தல் அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், எல்லா மாவட்ட கூட்டுறவுப் பனைபொருள் விற்பனை இணையங்கள், எல்லா பூமிதான, கிராமதான கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு பனைப்பொருள் கூட்டுறவு விற்பனை இணையம் இவற்றுக்கு மட்டுமல்லாமல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவை தொடங்கிய முதல் 6 ஆண்டுகள் வரை தணிக்கை கட்டணம் இல்லை. இயக்குநர், தொழில் வணிகத் துறை மற்றும் கதர் கிராமத் தொழில் துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்துள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவை தொடங்கிய 5 ஆண்டுகளுக்குத் தணிக்கைக் கட்டணம் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட சங்கங்கள் தவிர இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவை தொடங்கிய முதல் மூன்று ஆண்டுகளுக்குத் தணிக்கைக் கட்டணம் இல்லை. இந்தச் சலுகைகளே இப்போது போதுமானவை என்று கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 2, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

2 –

மேட்டூரில் சார்புநிலை நீதிமன்றம் அமைத்தல்.

*9252 – திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் சார்பு நிலை நீதிமன்றம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் சார்புநிலை நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS